# e-Learning Programme - 2020

**Grade - 10** | **Saivanary** | **Assignment - 01**

**செயற்பாடு - 01**

**பொருத்தமான விடையின் கீழ் கீறிடுக.**

1. "உள்பொருள் ஒன்றே" என சான்றுரைக்கும் நூல்
   1. திருவாசகம் 2. வேதம் 3. திருமுறை 4. தேவாரம்
2. பஞ்சகிருத்தியத்தில் அருளல் தொழிலை வடமொழியில் குறிக்கும் சொல்
   1. திரோபவம் 2. திதி 3. அநுக்கிரகம் 4. சிருஷ்டி
3. " குணங்கள் யாவற்றையும் கடந்தவர்" என்பதால் வழங்கப்படும் பெயர்.
   1. குணாநிதி 2. சச்சிதானந்தரூபி 3. நிர்விகாரி 4. குணாதீதர்
4. தவம் செய்தலுக்கு நிகரானதாக போற்றப்படுவது
   1. அன்பு செய்தல் 2. அதர்மம் செய்தல் 3. இன்மொழி பேசுதல் 4. திருமுறை ஓதல்
5. திருவள்ளுவர் அறியாமை என எதனைக் குறிப்பிடுகிறார்
   1. அறிவு 2. அறிவுடைமை 3. பேதைமை 4. புத்திசாலி
6. "ஈதல் அறம்", என போற்றும் பெரியார் யார்?
   1. பாரதியார் 2. ஔவையார் 3. திருவள்ளுவர் 4. விபுலானந்தர்
7. மனிதர்களின் வறுமை காரணமாக நிலவும் குறைப்பாடை நிவர்த்தி செய்வது
   1. நீதி 2. அநீதி 3. சமூகநீதி 4. சமூகஅநீதி
8. ஒப்புரவானுடைய செல்வம் ஊர் முழுதும் பயன்படும் முறைக்கு எதனை ஒப்பிடுகிறார்.
   1. ஊருணி 2. மரம் 3. மருந்து 4. காடு
9. இந்து மரபு காலக்கணிப்பீட்டில் எத்தனை ஆண்டுகள் உள்ளன.
   1. ஐம்பது 2. அறுபத்தைந்து 3. அறுபது 4. நூறு
10. இந்து மரபில் நிழல் கிரகங்களாக விளங்குபவை.
    1. ராகு, சந்திரன் 2. கேது, சூரியன் 3. ராகு, கேது 4. குரு, புதன்
11. சந்திரன் ஒவ்வொரு நட்சத்திரத்தையும் கடக்க எடுக்கும் காலமாக அமைவது.
    1. யோகம் 2. கரணம் 3. திதி 4. வாரம்
12. பூரணையை அடுத்து வரும் முதலாம் நாள் அழைக்கப்படும் முறை
    1. துதியை 2. பிரதமை 3. சதுர்த்தி 4. திருதியை
13. சிவனுக்குரிய நட்சத்திரம் யாது?
    1. விசாகம் 2. பூசம் 3. திருவாதிரை 4. திருக்கார்த்திகை
14. ஈழத்து சிதம்பரம் என போற்றப்படும் ஆலயம்.
    1. காரைநகர்ச் சிவன் கோயில் 2. காரைநகர்ச் விஷ்ணு ஆலயம் 3.திருக்கேதீஸ்வரம் 4.நகுலேஸ்வரம்



kalvi.lk

15. கார்த்திகை திருவிளக்கீடு சிறப்பாக நடைபெறும் பஞ்சபூத தலம்

1. சிதம்பரம் 2. திருவானைக்கா 3. திருக்காளத்தி 4. திருவண்ணாமலை

16. ரோகிணி நட்சத்திரத்தன்று விசேடமாக நடைபெறும் தீப உற்சவம்

1. விஷ்ணு ஆலய தீபம் 2. குமராலய தீபம் 3. சர்வாலய தீபம் 4. சிவனாலய தீபம்

17. சமயத்தீட்சை பெற்றோர் மாத்திரம் திருநீறு அணியும் முறை

1. பரவி பூசுதல் 2. உத்தூளனம் 3. திரிபுண்டரம் 4. ஒரு குறியுடன் பூசுதல்

18. ஆன்மாக்களின் மும்மலத்தை நீக்குவதால் விபூதிக்கு வழங்கும் பெயர்.

1. பசிதம் 2. ஷாரம் 3. இரட்சை 4. பஸ்மம்

19. இறப்பின் பின் ஒரு வருட காலம் வரை, ஒவ்வொரு மாதமும், இறந்த திதியில் நடைபெறுவது.

1. திதி 2. திவசம் 3. மாசிகம் 4. சிரார்த்தம்

20. அபரகிரியை எனும் பதத்தில் அபரம் என்பது எதனைக் குறிக்கின்றது.

1. செயன்முறை 2. செயல் 3. பிந்தியது 4. பந்தம்

21. "மன்னு மாமலை மமேந்திரம் அதனில்..." என ஆகமத்தை சிறப்பிக்கும் நூல்.

1. வேதம் 2. திருவாசகம் 3. பெரியபுராணம் 4. சிவபுராணம்

22. திருக்கோயிலுக்கு பொருத்தமான நிலத்தை தேர்ந்தெடுக்கும் முறையை ஆகமம் குறிப்பிடுவது.

1. பூகர்ஷணம் 2. பிராயச்சித்தம் 3. உற்சவம் 4. மகோற்சவம்

23. வேதம் என்ற சொல்லின் பொருளாக அமைவது.

1. அறியாமை 2. அறிவு 3.. பேதைமை 4. உரை

24. சிவனின் ஊர்த்துவ முகமாக போற்றப்படும் முகம்

1. தத்புருஷம் 2. அகோரம் 3. வாமதேவம் 4. ஈசானம்

25. காமிகம் முதல் வாதுளம் வரையான ஆகமங்களினதும், மிருகேந்திரம் முதல் விசிவான்மிகம் வரையிலான உபாகமங்களிதும் எண்ணிக்கை முறையாக அமைவது.

1. 28, 207 2. 25, 205 3. 207, 28 4. 28, 200

## செயற்பாடு - 02

**பின்வருவனவற்றுக்கு சுருக்கமான விடை தருக.**

1. கடவுள் என்பதன் பொருள் யாது?
2. புற ஆசாரங்கள் எனப்படுபவை யாவை?
3. இறைவன் உவக்கும் மலர்களாக விபுலானந்தர் எவற்றைக் குறிப்பிடுகிறார்?
4. நியமத்தின் பாற்படுபவை எவை?
5. வாய்மை என்பதற்கு வள்ளுவர் கூறும் வரைவிலக்கணம் யாது?
6. சந்திரனை அடிப்படையாகக் கொண்டு மாதத்தை கணிப்பிடும் முறை எத்தனை வகைப்படும்,அவை எவை?
7. பூர்வக்கிரியைகள் நான்கு தருக.
8. விநாயகசஷ்டி அனுட்டிக்கப்படும் காலத்தை கூறுக.
9. இந்து மதத்தின் பொது நூல் எது,சிறப்பு நூல் எது?
10. இருக்குவேதப் பாடல்களில் போற்றிப் புகழப்படும் தெய்வங்களுள் நான்கை கூறுக.



kalvi.lk

## செயற்பாடு - 03

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. அ) நாம் கடைபிடிக்க வேண்டிய விழுமியப் பண்புகள் நான்கு தருக.
   ஆ)அட்ட புஷ்பங்கள் எவை ?
   இ) கல்வியின் பயன் எதுவாக இருத்தல் வேண்டும்.

2. ஆ) விரதம் என்பதன் பொருள் யாது?
   ஆ) புரட்டாதி சனி அனுட்டிக்க வேண்டிய விரத நியதிகளை கூறுக.
   இ) விரதங்ககள் அனுட்டிப்பதால் நாம் அடையக்கூடிய நன்மைகளை விளக்குக.

3. அ) வேதத்துக்கு வழங்கப்படும் வேறு பெயர்களை தருக.
   ஆ) அதர்வ வேதம் எவற்றை உள்ளடக்கியுள்ளது.
   இ) கடவுள் ஒருவரே என்பதற்க வேதம் கூறும் விளக்கம் யாது,திருவாசகம் கூறும் விளக்கம் யாது?

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT,  B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page